அலவன்ஸ் உயர்த்தப்பட்டது. அதைப்போல் இந்தப் பிரயாணப் படியையும் உயர்த்துவதற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டியர்னஸ் அலவன்ஸ் அதிகப் படுத்தியதுபோல் இந்தப் பிரயாணப்படியை உயர்த்துவதற்கு உத்தேசம் இல்லை.

Family Pension Scheme

* 395 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to liberalise the Family Pension Scheme extended to the widows and minor children of the deceased Government servants; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது மத்திய அரசாங்கத்திலே ஊழியம் செய்து இறந்து போனவர்களுடைய மனைவிகளுக்கு—விதவைகளுக்கு ஆயுட்காலம் வரைக்கும், குழந்தைகளுக்கு—ஆண்களாக இருந்தால் மேஜர் ஆகும் வரைக்கும், பெண்களாக இருந்தால் திருமணம் ஆகும் வரைக்கும் குடும்ப ஓய்வு பணம் கொடுப்பதற்குத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நம்முடைய சர்க்கார் இனியாகிலும் பரிசீலனை செய்து லிபரலைஸ்ட் பென்ஷன் கொடுக்க உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவ்விஷயத்தில் மத்திய அரசாங்கத்தில் என்னென்ன மாறுதல் செய்யப்பட்டிருக்கிறதோ அதையெல்லாம் நமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பொற்கொல்லர்களின் புனர்வாழ்வு

* 396 கேள்வி.—**திரு. எம். எஸ் செல்வராஜன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்தில் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் எத்தனை பேர்?

(இ) செப்டம்பர் 1964 முடிய வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

(உ) இதுவரை எத்தனை பேருக்கு மாவட்டவாரியாக வேலை கிடைத்திருக்கிறது ?